# பாலியல் வன்முறை தொடர்பாக இலங்கையில் உள்ள சட்ட கட்டமைப்பு சீர்திருத்தத்திற்கான தேவைப்பாடு

Women and Media Collective
Established 1984

Norwegian Embassy
*Colombo*

# சுருக்கக் குறிப்பு

BRIEFING NOTE

## பாலியல் வன்முறை தொடர்பாக இலங்கையில் உள்ள சட்ட கட்டமைப்பு சீர்திருத்தத்திற்கான தேவைப்பாடு

இலங்கை பொலிஸ் பிரிவினால் வழங்கப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பாலியல் வன்புணர்ச்சி தொடர்பான வழக்குகளில் தீர்ப்பு வழங்கும் வீதம் அச்சமூட்டும் வகையில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது இந்த அடிப்படையில் நோக்கும்போது ஆகக்குறைந்த தீர்ப்பு வீதமானது வன்முறைப் புணர்ச்சி தொடர்பான தண்டனை ஏற்ற ஒரு மாய நிலையை உருவாக்குகின்றது. இவ் தண்டனை

அற்ற நிலையானது பாலியல் குற்றம் புரிந்தவர்கள் அக் குற்றத்தால் ஏற்படும் விளைவுகள் பற்றிய பயமின்றி தொடர்ச்சியாக பாலியல் வன்முறைகளில் ஈடுபடவும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான பாதிக்கப்பட்ட தரப்பினர் அக்குற்றத்தை முறையிடுவதில் இருந்து தடுப்பதாகவும் அமைகிறது.

**A: பதிவு செய்யப்பட்ட வழக்குகள்.**
**B: அகற்றப்பட் ட வழக்குகள்.**
**C: தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குக**

இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தமானது வன்முறை புணர்ச்சியின் வரைவிலக்கணத்தை விரிவு படுத்துவதுடன் அதனுள் பாலியல் வன்முறைக்குள் அடங்கும் பரந்துபட்ட நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்ட தோடு ஒப்புதல் தொடர்பாக பயனுள்ள விளக்கமும் வழங்கப்பட்டுள்ளது. இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் வன்முறைப் புணர்ச்சி தொடர்பாக காணப்படும் விதிமுறை ஆதாரங்கள் ஆண்களுக்கு மேற்கொள்ளப்படும் வன்முறைப் புணர்ச்சி தொடர்பாக எதுவும் குறிப்பிடாத நிலையில் இவ்வகையான குற்றங்களை பற்றிக் குறிப்பிடும் 365 B பிரிவு மூலம் வன்முறைப் புணர்ச்சி வழக்குகளில் பெண்களுக்கு கிடைக்கப்பெறும் பாதுகாப்பு போல போதிய அளவு பாதுகாப்பு ஆண்களுக்கு வழங்கப்படவில்லை.

இலங்கையில் ஆதார அரசாணையின் 155ஆவது பிரிவில் உள்ள சான்றுகோள் விதி வன்முறைப் புணர்ச்சியால் பாதிக்கப்பட்ட நபரின் பாலியல் வாழ்க்கை வரலாற்றை

| | 2016 [1] | | | 2017 [2] | | | 2018 [3] | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | A | B | C | A | B | C | A | B | C |
| வன்முறைப் புணர்ச்சி | 346 | 9 | 0 | 290 | 9 | 0 | 339 | 5 | 0 |
| 18 வயதுக்கு குறைந்த பெண்ணின் ஒப்புதலுடன் மேற்கொண்ட வன்புறைர்வு. | 1394 | 11 | 0 | 1204 | 7 | 0 | 1199 | 10 | 0 |
| 18 வயதுக்கு குறைந்த பெண்ணின் ஒப்புதலின்றி மேற்கொண்ட வன்புறைர்வு. | 291 | 4 | 0 | 232 | 3 | 0 | 248 | 4 | 0 |

1883 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தண்டனைச் சட்டக் கோவையில் இலங்கையில் பாலியல் வன்முறைகளுடன் தொடர்புடைய சட்டங்கள் முதன்மையாக உள்ளடக்கப்பட்டுள்ளன. பாலியல் வன்முறை தொடர்பாக தண்டனைச் சட்டக் கோவையில் காணப்படும் விதிமுறை ஆதாரங்கள் 1995, 1998 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் சீர்திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டன. இருப்பினும் திருமணத்திற்குப் பின்னர் கணவரால் மேற்கொள்ளப்படும் வன்முறை புணர்ச்சியின் அங்கீகாரமற்ற நிலை பாலியல் வன்முறையை தெளிவாக விளக்குவதற்கு மையமாக அமையும். ஒப்புதல் (Concent) பற்றிய ஒரு வரைவிலக்கணம் இன்மை மற்றும் ஆண்களுக்கு மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறைக்கு எதிரான போதுமான அளவு பாதுகாப்பின்மை ஆகியன சட்டத்தில் சீர்திருத்தம் அவசியம் என்பதற்கு பிணை ஆதாரமாக பல்வேறு கருத்துக்களுடன் நீடித்திருக்கின்றது.

தெற்காசிய பிராந்தியத்தில் நேபாளம் பூட்டான் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் திருமணத்திற்கு பின்னர் கணவரால் மேற்கொள்ளப்படும் வன்முறைப் புணர்ச்சி ஒரு குற்றமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது 2013ஆம் ஆண்டில்

நீதிமன்றத்தில் எடுத்துரைக்கவும் விவாதிக்கவும் அனுமதி வழங்குவதோடு பாதிக்கப்பட்டவரின் மீதே குற்றம் சுமத்தும் அமைப்பு முறை காணப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர் மீதே குற்றம் சுமத்தும் செயற்பாடானது பாலியல் குற்றவாளிகளுக்கு தண்டனையற்ற நிலையை உருவாக்குகின்றது. மற்ற வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபரின் குணம் பரிசீலிக்கப்பட நிலையில் பெண்களின் மீதான வன்முறைப் புணர்ச்சி சந்தர்ப்பத்தில் மாத்திரம் அவருடைய குணத்தினை ஆராய்தல் பாலின அடிப்படையில் பாரபட்சத்தை காட்டுகின்றது.

சில குறிப்பிட்ட வழக்கு களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் அடிப்படையில் 18 வயதிற்கு குறைந்த பெண்களுக்கு 18 வயதிற்கு மேற்பட்ட ஆணால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைப் புணர்ச்சிக்கு தண்டனையாக வழங்கப்படும் ஆக குறைந்த தண்டனைக் காலம் நீதிமன்ற தீர்ப்புகளிலேயே பிறப்பிக்கப்பட்டுள்ளது சில குறிப்பிட்ட வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளின் மொழிப் பிரயோகங்களை ஆராயும்போது பாலின அடிப்படையில் காணப்படும் தொன்மையான மாறாத

கருத்துக்கள் நீதிமன்றத்தில் ஏற்படுத்திய பாரபட்சமான நிலை தெரியவருகின்றது.[4]

பாலியல் வன்முறை தொடர்பாக இலங்கையில் காணப்படும் சட்டங்கள் தொடர்பான மற்றுமொரு முக்கியமான கருத்து யாதெனில் தற்பாலின துணைகளுக்கிடையே விருப்பற்றலின் பேரில் இடம்பெறும் உடலுறவை குற்றமாக்கும் தற்காலத்துக்கு ஒவ்வாத சட்டங்கள் தொடர்ச்சியாக செல்லுபடியாகுதல் ஆகும்.[5]

இந்திய தண்டனை சட்டக்கோவையில் ஒரே பாலினத்தை சேர்ந்த இரு துணைகளுக்கு இடையிலான பாலியல் நடவடிக்கையை குற்றமாக்கும் விதிமுறை ஆதாரத்தை 2018 ஆம் ஆண்டு இந்திய உயர் நீதி மன்றம் பொருள் கூறியுள்ளது.(5) இலங்கையின் தண்டனை சட்ட கோவையயை போலவே பிரித்தானியர் ஆட்சிக்காலத்தியிலேயே இந்திய தண்டனை சட்டக்கோவையும் இயற்றப்பட்டது. 1967 ஆம் ஆண்டு பிரித்தானிய பாராளுமன்றம் தற்பாலின பாலியல் நடவடிக்கையை குற்றமற்றதாக அறிவித்தது. நேபாளத்திலும் ஓரின பாலின நடவடிக்கை குற்றமற்றதாக்கப்பட்டுள்ளது. பூட்டானில் சட்டத்தை சீர்திருத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மைக்கால வழக்கொன்றில், நீதிபதி அலுவிஹாரி கூறியது யாதெனில்," சமகாலத்திற்குரிய சிந்தனைப்படி வயது வந்தவருக்கிடையில் விருப்பற்றலின் பேரில் இடம்பெறும் பாலியல் நடவடிக்கையில் அரசாங்கமானது பொலிஸார் மூலம் ஒழுங்குமுறையை விதிக்காமல் அதை குற்றமாக்காமல் இருத்தல் வேண்டும். பல வருடங்களாக இது குற்றமாகும் ஆதாரமாக வளர்ந்து வந்தாலும் அதிலடங்கியுள்ள உள்ளார்ந்த அர்த்தம் முறைகேடு மற்றும் தரமற்ற செயல் குற்றத்தை இங்கிலாந்து சட்டத்திலிருந்து நீக்குவதற்கு வவழிவகுத்துள்ளது.[6]

***பல நூற்றாண்டு காலமாக எல்.ஜி.பி.டி சமூகத்தையும் அவர்களுடைய குடும்பங்களையும் ஒதுக்கிவைத்து துன்பப் படுத்துவதற்கும் அவர்கள் பட்ட அவமானத்தையும் குறைகளையும் போக்க ஏற்பட்ட தாமதத்திற்காகவும் அவர்களுடைய சமூகத்திற்கும் அதன் குடும்பங்களுக்கும் மன்னிப்பு கேட்க வேண்டிய கடப்பாடு வரலாற்றுக்கு உண்டு. இக் குடும்பத்தின் அங்கத்தவர்கள் தமது வாழ்நாள் காலம் முழுவதும் பயத்துடனும், பசியுடனும், தண்டனைகளுடனும் வாழ கட்டாயப்படுத்தப்பட்டனர் தற்பாலின நடவடிக்கை என்பது மனித பாலியல் உறவில் ஒரு பகுதி என்பதும் அது முற்றுமுழுதாக இயற்கையாகவே தோன்றக் கூடியது என்பதும் பெரும்பான்மையானோர் அறியாமையே இதற்கு காரணம்.***

பல்வேறு விஞ்ஞான ஆராய்ச்சி உண்மைகளை பரிசோதித்ததன் அடிப்படையில் உறுதியாக்கப்பட்டது யாதெனில் ஒருவருடைய பால்நாட்டமானது மரபுவழி, ஹார்மோன், உருவாக்கப்பட்ட, சமூக மற்றும் கலாசார செல்வாக்குகளினால் தீர்மானிக்கப்படுகின்றது. இருப்பினும் LGBT மக்களுக்கு தமது பால்நாட்டம் தொடர்பாக மிகவும் குறைந்தளவான தெரிவு அல்லது எந்தவொரு தெரிவுகளும் அற்ற நிலை காணப்படுகின்றது என இந்திய உயர்நீதிமன்றம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.[7]

**மேற் கூறப்பட்டவைகளின் அடிப்படையில் நிலைமுறைச்சட்டம் மற்றும் செயன்முறைக்கு சீர்திருத்தங்களாக பின்வருவனவன பரிந்துரை செய்யப்படுகின்றது.**

- ஏதேனும் ஒரு பொருளை பயன்படுத்தியோ அல்லது குற்றவாளி தன்னுடைய உடலின் பாகத்தை பயன்படுத்தியோ அல்லது இன்னொருவர் மூலமாக மேற்கொள்ளப்படும் வன்புணர்வு வன்புணர்வுக்கான வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட வேண்டும். ஒப்பந்தமானது ஒரு தெளிவான அறியப்பட்ட தெளிவாக அங்கீகரிக்கப்படுவதுடன் சம்மதம் பற்றி குறிப்பிடப்படாத நிலையில் வரைவிலக்கணம் உருவாக்கப்பட வேண்டும்.
- திருமணத்திற்கு பின் இடம்பெறும் வன்புணர்வு குற்றமாக்கப்படல் வேண்டும்.
- 18 வயதிற்கு குறைந்தவர் மீது மேற்கொள்ளப்படும் வன்புணர்வு தொடர்பில் காணப்படும் சட்டங்களிநதும் அதை நடைமுறைப்படுத்துவதிலும் உள்ள குறைபாடுகள் விளக்கப்பட வேண்டும்.
- ஆதார கட்டளைச் சட்டத்தின் 155 ஆவது பிரிவின்படி வன்புணர்வு வழக்குகளில் பெண்ணினுடைய பாலியல் வாழ்க்கை வரலாற்றை கருத்தில் கொள்வது அனுமதிக்காத்திருக்க சீர்திருத்தப்பட வேண்டும்.
- 365 ஆவது பிரிவு மற்றும் 365 (A) ஆவது பிரிவினை சட்ட நீக்கம் செய்வதன் மூலம் ஒரே பாலினத்தை சேர்ந்தவர்கள் இடையே நடைபெறும் உடலுறவை குற்றமாக்குத்தல் வேண்டும்.
- வன்புணர்வு உள்ளடங்களாக பாலியல் வன்முறைகளில் இருந்து ஆண்களை பாதுகாக்க பாதுகாப்பை விரிவுபடுத்தல்.
- நீதி பயிற்சி மற்றும் சட்ட கல்வியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் பால் தொடர்பில் காணப்படும் மாறாத தொன்றுதொட்ட கருத்துக்கள் மற்றும் பக்கச்சார்பு களை நீக்குதல்.

1. பாரதூரமான குற்றங்கள் அறிமுகம் 2016 (2017 இலங்கை பொலிஸ்) https://www.police.lk/images/others/crime_trends/2016/grave_crime%20.pdf
2. பாரதூரமான குற்றங்கள் அறிமுகம் 2016 (2017 இலங்கை பொலிஸ்) https://www.police.lk/images/others/crime_trends/2016/grave_crime%20.pdf
3. பாரதூரமான குற்றங்கள் அறிமுகம் 2016 (2017 இலங்கை பொலிஸ்) https://www.police.lk/images/others/crime_trends/2016/grave_crime%20.pdf
4. சண்டனீ அபயவர்டன, ‘ ஒத்த தன்மை , பிம்பங்கள், கட்டுக்கதைகள் : இலங்கையின் பாலியல் வன்புணர்வு தொடர்பான நீதிமன்ற தீர்ப்புக்களின் பெண்களின் நிலை பற்றிய சட்ட ஆதாரங்களின் ஒரு சான்று ஆய்வு, 37-44, LST திறனாய்வு: Queering the Law, https://www.forum-asia.org/uploads/wp/2017/03/LST-Review-Queering-the-Law-Dec-2016.pdf
5. நவ்றீஜ் சின்ங் ஜோஹாரும் பிறரும் மற்றும் இந்திய ஒன்றியம் (2018) W.P. (Crl)இல 76 of 2016 https://sci.gov.in/supremecourt/2016/14961/14961_2016_தீர்ப்புக்கள்_06-புரட் -2018.pdf
6. பி.பொ.அ மரடான மற்றும் . கலபட பயகலகெ சனத் விமலசிரி, அதியுயர் மேன்முறையீடு இல 32/2011, 11-12 http://www.supremecourt.lk/images/documents/sc_appeal_32_11.pdf
7. பக்கம் 50

**May 2021**


**Women and Media Collective**
56/1, Sarasavi Lane, Castle Street,
Colombo 08, Sri Lanka.
Email: wmcsrilanka@womenandmedia.org
Web: womenandmedia.org
Facebook: https://www.facebook.com/womenandmediacollective
Twitter: https://twitter.com/womenandmedia


Women and Media Collective
Established 1984

Norwegian Embassy
*Colombo*